<u>விரைவு நீதிமன்றம், காரைக்குடி</u>

முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, **B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ம் நாள் செவ்வாய்க்கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண்.2741/2024
இன்
<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :154/2022</u>

பி.சண்முகம் ......மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

ராஜேஷ்வரி .......எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது, கடந்த 21.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 09.12.2024-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எல்.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஏ.வி.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் புகார்தாரரை திரும்ப அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி BNSS 348-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**<u>1. மனுச்சுருக்கம்</u>**

1.மேற்படி வழக்கில் தனது தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு மேற்படி வழக்கும் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் எதிரி கடந்த 01.03.2020 அன்று எனக்கு சாட்சிகள் முன்னிலையில் எழுதி பூர்த்தி செய்து கொடுத்த பிராமிசரி நோட்டும் தன்னை முதல் விசாரணை செய்த காலகட்டத்திலும், வேறு சில ஆவணங்களுடன் கலந்துவிட்டபடியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. வேறு ஆவணங்களை தேடும்போது தற்போதுதான் மேற்படி பிராமிசரி நோட்டும் அதனுடன் கலந்திருந்தது தனக்கு தெரியவந்தது.

2.மேற்படி பிராமிசரி நோட்டு குறித்து தனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பிலும் தனது புகார் மனுவிலும் நான் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி ஆவணத்தை இத்துடன் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கை தீர்மானிக்க எதிரி எனக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது. மனுதாரர்/புகார்தாரரை திரும்ப அழைத்து மறுவிசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## <u>2.எதிருரை</u>

1.மேற்படி வழக்கில் மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் 28.12.2022 ம் தேதி புகார்தாரர் புகார்மனு தாக்கல் செய்யும்போது 01.03.2020 ம் தேதியன்று சாட்சிகள் முன்னிலையில் மனுதாரர்/புகார்தாரருக்கு எதிரி/எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் புரோநோட்டை ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு எவ்வித காரணமும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி மனுதாரர்/புகார்தாரரை 25.07.2023 ம் தேதி எதிரி தரப்பில் மேற்படி புரோநோட்டு எழுதி கையெழுத்திட்டு கொடுக்கவில்லை என்பதையும் தாவா வழக்கு காசோலையும் கையெழுத்திட்டு கொடுக்கவில்லை என்பதையும் எதிரி தனது பதில் நோட்டீஸ், First Questioning மற்றும் எதிரி தரப்பில் எதிரியை முதல் விசாரணையின்போதும் எதிரியை மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் எதிரியை குறுக்கு விசாரணை செய்யும்போதும் தெளிவாக எதிர்மனுதாரர்/எதிரி தான் புரோநோட் எழுதிக்கொடுக்கவில்லையென்றும், அதிலுள்ள கையெழுத்து மற்றும் அதில் உள்ள கைரேகை தன்னுடையதில்லை என மறுதுள்ள நிலையில் மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும் மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

2.தனது தரப்பில் மேலும் சாட்சி விசாரிக்க வேண்டியது இல்லையென மேலெழுத்து செய்யப்பட்டு அதன் பிறகு எதிரி தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு இருதரப்பிலும் வாதுரைக்காக மேற்படி வழக்கும் 21.10.2024 தேதியிட்டு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரை முதல் விசாரணை செய்த கால கட்டத்தில் வேறு சில ஆவண்களுடன் கலந்துவிட்டதால் புரோநோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என குறிப்பிட்டு தற்போது தான் கிடைத்ததாகவும், அதனை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ரீ-கால் மனுவும் ஏற்புடையது அல்ல.

3.இதுவும் மனுதாரர்/புகார்தாரர் தனது வழக்கிற்கு தோதாக முன்பே புரோநோட் இருப்பதாக சொல்லிவிட்டு அதனை புகார் மனு தாக்கல் செய்யும் போதோ புகார்தாரர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கும் போது தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது வாதுரைக்காக வழக்கு வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதாரர்/புகார்தாரர் தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து பின்யோசனையுடன் அதனை தன்னை மீண்டும் விசாரித்து தாக்கல் செய்ய வேண்டுமென கோரியுள்ள மனுவும் ஏற்கக்கூடியது இல்லை. மனுதாரர்/புகார்தாரர் வழக்கில் விடுபட்ட சங்கதிகள் நிரப்புவதற்கு முயற்சி செய்கிறார் என்பதும் இருதரப்பு சாட்சியத்திற்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் அனுமதிக்க வேண்டியதில்லை. எதிர்/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொண்டு மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ரீ-கால் மனுவை தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**<u>4. பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், கடன் பெற்றபோது எதிரி புகார்தாரருக்கு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி கடனுறுதிச்சீட்டை புகார்தாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்மனுவினை பரிசீலனை செய்தபோது கடந்த 01.03.2020 அன்று எதிரி புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்றபோது ஆதரவாக கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. புகார்தாரர் அவரது வழக்கை நிரூபிக்க கடமைப்படுள்ளார் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்திருக்கும் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் எதிர்வரும் 16.12.2024 அன்றே ம.சா.1 ஐ மீண்டும்

அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தவறினால் சாட்சியம் தாமகவே முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.